2014 ஜூலை 22] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

அதேபோல், நாட்டின் முதன்மையான தொழிலான வேளாண் தொழிலை ஊக்குவிப்பதிலும், வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதிலும் முதன்மை மாநிலமாக விளங்கும் தமிழகத்தில் நடப்பாண்டில் குறுவை நெல் சாகுபடியை மேற்கொள்வது குறித்து, கருணையின் பிறப்பிடம் மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையில் 6–6–2014 அன்று விரிவான, முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், தற்பொழுதுள்ள சூழ்நிலையில் குறுவை சாகுபடியை விவசாயிகள் மேற்கொள்வதை ஊக்குவிக்கும்வகையில், விவசாயிகளின் பாதுகாவலர் மாண்புமிகு அம்மா அவர்கள் விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், மழை நிலவரம் மற்றும் நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. வரக்கூடிய மாதங்களில் மழை குறைவாக இருந்தால், கருணையின் பிறப்பிடம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு சுனாமி ஆழிப்பேரலை வந்தபோது, அண்டை நாடுகள் எல்லாம் அச்சத்தில், அதிர்ச்சியில் உறைந்திருந்தபோது, சுனாமி வந்த வேகத்தைவிட விரைவாக சுனாமி பாதித்த இடங்களுக்கு நேரடியாகச் சென்று, (மேசையைத் தட்டும் ஒலி) நிவாரணப் பணிகளை மேற்கொண்டு உலகளவில் பாராட்டைப் பெற்றவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் அன்றைக்கிருந்த அதிகாரிகள் எல்லாம், “மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, சுனாமி மீண்டும் வரும், ஆகவே அந்த இடத்திற்குச் செல்வது உயிருக்கு ஆபத்து” என்று கூறியபோதும், தன் உயிரை துச்சமெனத் தூக்கி எறிந்துவிட்டு, என் உயிரைவிட தமிழக மக்களின் உயிர்தான் எனக்கு முக்கியம் என்று (மேசையைத் தட்டும் ஒலி) ஓடோடிச் சென்று நேரடியாகக் களத்தில் இறங்கி நிவாரணப் பணிகளை மேற்கொண்டு, சுனாமி வந்த கடலை வென்றெடுத்த கருணைக் கடல்தான் எங்கள் அம்மா என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேவேளையில் சுனாமி வந்தபோது, சுனாமி வந்த வேகத்தைவிட,

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2014 ஜூலை 22

இருந்த இடத்தைவிட்டு ஓடி ஒளிந்த கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே 2009 ஆம் ஆண்டு (குறுக்கீடுகள்) பதில் கேளுங்கள். 2009 ஆம் ஆண்டு வறட்சி வந்தபோது (குறுக்கீடுகள்) 2009 ஆம் ஆண்டு வறட்சி வந்தபோது வெறும் 24.25 கோடி ரூபாய்தான் இவர்கள் வறட்சிக்காகக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) ஆகவே, 24.25 கோடி ரூபாய் மாத்திரம்தான் இவர்கள் வறட்சி வந்தபோது கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ரூ.1,613.61 கோடியை வாரி வழங்கி, தமிழக மக்களுடைய வாழ்விலே ஒளியேற்றி வைத்தவர். ஆகவே, தமிழக மக்களுக்கு. . . (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–55

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கையருகே வந்து கோஷமிட்டனர். தி.மு.க. உறுப்பினர்கள் திரு. அ. சௌந்தரபாண்டியன், திரு. மு. திராவிடமணி மற்றும் திரு. கா. ராமச்சந்திரன் ஆகியோர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கையருகே தரையில் அமர்ந்து கோஷமிட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். முதலில் உங்கள் இடத்திற்குப் போங்கள். நான் உங்களை எச்சரிக்கிறேன். நான் உங்களை எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் இந்தமாதிரி செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். இதெல்லாம் முறையல்ல. முதலில் நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை நான் பலமுறை எச்சரித்தும், அந்த எச்சரிக்கைக்கு செவிமடுக்காமல் அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற காரணத்தினாலே, அவைத் தலைவருடைய இருக்கையருகே வந்து முற்றுகையிட்டு, தரையில் வந்து உட்கார்ந்து அவை நடவடிக்கைகளை நடத்தவிடாமல் செய்கின்ற காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை இந்த அவையிலே இருந்து வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு நான் உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) வெளியேற்றுங்கள். வெளியேற்றுங்கள். அவைக் காவலர்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

2014 ஜூலை 22] [பேரவைத் தலைவர்]

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

கோஷமெல்லாம் போடக்கூடாது. வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். நான் பேசுகிறேன். அவைக் காவலர்கள், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். அவர்கள் பேரவைத் தலைவரின் இருக்கையை முற்றுகையிட்டது சரியா? அதைச் சரியென்று நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? இப்படிச் செய்தால் நான் அவையை நடத்த முடியுமா? அவையை நடத்துவதற்கு அவர்கள் ஒத்துழைப்புத் தரவில்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

நண்பகல் 12–00

(மனிதநேய மக்கள் கட்சி உறுப்பினர்கள் மற்றும் புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கவன ஈர்ப்பின்மீது தனது பதிலுரையைக் கூறிக்கொண்டிருந்தபோது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் குறுக்கிட்டு, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் முன்பாக ஒட்டுமொத்தமாக வந்து, விரும்பத்தகாத வார்த்தைகளாலும், விரும்பத்தகாத செயல்களாலும், இங்கே ஓர் அசாதாரணமான சூழ்நிலையை உருவாக்குகிற நோக்கத்தோடு குழப்பத்தை விளைவித்தார்கள். அப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், "நீங்கள் இருக்கைகளில் சென்று உட்காருங்கள், உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன்" என்று திரும்பத் திரும்பச் சொல்லியும், நான் சொல்லியும், கேட்காமல் தொடர்ந்து சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களை முற்றுகையிட்டு. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் லாபியில் கோஷம் போடாமல், அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். அவைக் காவலர்கள், லாபியிலிருந்தும் அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

[2014 ஜூலை 22

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவரை முற்றுகை இடுவதையே அவர்கள் குறிக்கோளாகக் கொண்டு, தகாத செயலைச் செய்துகொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இங்கே ஏற்பட்டது. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய இருக்கைக்கு வந்து முற்றுகையிடும்போது, பேரவைத் தலைவர் அவர்கள் இங்கு ஏதாவது rulings கொடுக்க முடியுமா? நான் எழுந்து, "நீங்கள் அனைவரும் அவரவர் இடங்களில் உட்காருங்கள், வாய்ப்புத் தருவோம், பேசுங்கள். பேசியதற்குப் பின்னால் பேரவைத் தலைவர் அவர்கள் தங்களுடைய தீர்ப்பினை வழங்குவார்கள்" என்று பலமுறை எடுத்துச் சொல்லியும், அவர்கள் அதைக் கேட்கவில்லை. (குறுக்கீடு) திட்டமிட்டு, இங்கு வந்து குழப்பம் விளைவிப்பதற்கென்றே தங்கள் நடவடிக்கையை தொடர்ந்து அவர்கள் மேற்கொள்கிறார்கள் என்பதனை நான் இந்தச் சபையின் மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருகக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் சபை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிப்பதற்கென்றே தினமும் வருகிறார்கள். வந்து சபையில் பிற உறுப்பினர்களையும் பேச விடாமல், இடையூறு செய்வதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். இது சரியா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், இதை சரி என்கிறீர்களா? (குறுக்கீடு) இது முறை என்கிறீர்களா? (குறுக்கீடு) இப்படி ஒத்துழைப்பு இல்லாமல் இருந்தால் நான் சபையை எப்படி நடத்துவது? இதை நியாயப்படுத்துகிறீர்களா? (குறுக்கீடு) பேரவைத் தலைவர் இருக்கையை முற்றுகையிட்டு, பேரவைத் தலைவரிடம் தகாத வார்த்தைகளைப் பேசியது முறையா? பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) இதற்குப் பரிந்துப் பேசுகிறீர்களா?

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முற்றுகை இட்டது தவறு. ஆனால், கவன ஈர்ப்பின்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றபோது, தற்போது எழுப்பப்பட்ட பிரச்சினையின்மீது பதில் சொல்லியிருந்தால் பரவாயில்லை. தேவையற்ற பிரச்சினைகளை கிளப்புவதென்பது. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை எழுந்து பதில் சொல்ல விட்டார்களா? (குறுக்கீடு)